UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள் ஒரு பார்வை

**ச. விக்ரம்**
முழு நேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
**முனைவர் செ. மார்கண்டன்**
இணைப் பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை 600 117

**முன்னுரை**

மொழியானது மனிதன் வாழக்கூடிய இடத்தையும், சூழ்நிலையையும் பொறுத்தே அமைகின்றன. அந்ததந்த மாவட்டங்களின் புவியியல் மற்றும் கலாச்சார பின்னணியைப் பொறுத்தே வேறுபடுகின்றன. ஒவ்வொரு மனிதனும் பேசக்கூடிய மொழிகளில் அவரவர் மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் சொற்கள் மாற்றம் அடைந்து பொருளைத் தருகின்றன. அவ்வாறான சொற்கள் எம்முறையில் வட மாவட்ட வட்டார வழக்குச் சொற்களாக மாற்றம் அடைந்து மக்களிடயே புழக்கத்தில் இருக்கின்றன என்பதனைப் பற்றிக் கீழ்க்காணும் கட்டுரையின் மூலம் விரிவாகக் காண்போம்.

**வட்டார வழக்குச் சொல்லின் விதி**

பெரும்பாலான வட்டார வழக்குகளில் "மின்தொடர்பு விதி" செயல்படுகிறது. மின்சாரம் இருபுள்ளிகள் நடுவே இருக்கும் குறைந்த தூரத்தையே தேர்வு செய்யும். அதுபோல, சொற்களின் முதல் – கடைசி என இருபுள்ளிகள் நடுவே உச்சரிப்பு அதிவேகமாக ஓடிச் செல்வதை வட்டார வழக்கின் ஒரு விதி எனலாம். உதாரணமாக, "நாராயண அய்யர்" என்ற சொல் "நார்ணயர்" என்று மாற்றம் அடைகிறது.

**தமிழ்நாட்டில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள்**

ஒவ்வொரு மனிதனும் பேசக்கூடிய மொழிகளில் இருந்து பல கிளை மொழிகள் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றுகின்ற கிளை மொழியானது வட்டார மொழி என்று அழைக்கப்படுகிறது. சான்றாக, சங்க காலத்தில் வட்டார வழக்குச் சொற்கள் இருந்துள்ளன என்பதை, "பன்றி நாடு, குட்ட நாடு, குட நாடு, அருவா நாடு" என "செந்தமிழ்சேர் பன்னிருநிலத்தை" வட்டார அடிப்படையில் தான் பிரித்திருக்க வேண்டும். ஏனெனில் பின்னர் தோன்றிய உரையாசிரியர்கள், ஏதேனும் ஒரு உயிரினத்தையோ அல்லது ஒரு பொருளையோ குறிக்கும் பெயரினை நாட்டினுக்கு நாடு வேறுபடுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இன்று தமிழ்நாட்டில் வட மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், மக்களிடம் சாதி வழக்குச் சொற்கள், சமய வழக்குச் சொற்கள், தொழில் வழக்குச் சொற்கள், பிற வழக்குச் சொற்கள் எனும் பிரிவுகளைக் கொண்டு மக்களிடம் பேசப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமல்ல உலகளவில் தமிழில் "22 வட்டார வழக்குகள்" இருப்பதாக "எத்னொலோக்" என்ற உலக மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம் தெரிவிக்கிறது.

அவையாவன, "ஆதி திராவிடர், ஐயர், ஐயங்கார், அரவா, பருகண்டி, கசுவா, கொங்கர், கொரவா, கொர்சி, மதராசி, பரிகலா, பாட்டு மொழி, இலங்கை தமிழ், மலேசியா தமிழ், பர்மா தமிழ், தென்னாப்பிரிக்கா தமிழ், திகாலூ, அரிசன், சங்கேதி, கெப்பார் போன்றவைகளாகும்.

**சாதி வழக்குச் சொற்கள்**

தமிழ்நாட்டில் வாழக்கூடிய மக்கள் பல சாதி பிரிவின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சாதியினரும் அவரவர் அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.